## 2026 ஆகஸ்ட் மாதம் 12– ஆம் தேதி புதன்கிழமை

## கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

## S.C. நெம்பர் : 4/2025

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 (LW7) – பாண்டி |
| தகப்பனார் பெயர்: | கல்யாணித்தேவர் |
| ஊர்: | சி.பெருமாள்பட்டி |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 67 |

12.08.2026

(எதிரி காணொளி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு, அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சி.பெருமாள்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். 27.02.2024 ம் தேதி காலை சுமார் 10.15 மணியளவில் நானும், சின்ன ஓவுலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஈஸ்வரனும் சின்ன ஓவுலாபுரம் கிராமத்தின் கிழக்குப் பக்கத்தில் உள்ள பாலத்தின் அருகில் நடந்து சென்று கொண்டிருந்தோம். போலீசார் அங்கு எதிரி கார்த்திக்கேயனை

விசாரித்துக் கொண்டிருந்தார்கள். எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை போலீசார் பதிவு செய்துக் கொண்டார்கள். கார்த்திக்கேயன் வெள்ளைச் சட்டையையும், கத்தியையும் எடுத்து வந்து போலீசாரிடம் ஆஜர் செய்தார்.

2. என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 கத்தி மற்றும் அ.சா.பொ.2 சட்டை எதிரி எடுத்து ஆஜர் செய்த கத்தி மற்றும் சட்டையாகும். நானும், ஈஸ்வரனும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் தயார் செய்த அத்தாட்சியில் நானும், ஈஸ்வரனும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

3. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த இடத்திற்கும் எனது தோட்டத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1/2 கி.மீ. தூரம் ஆகும். மொக்கைப்பாண்டி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது மைத்துனர் ஆவார். ஈஸ்வரன் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது தம்பி ஆவார். ஈஸ்வரன் தோட்டம் வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் தகவல் சொல்லி எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த இடத்திற்கு சென்றேனா என்றால் இல்லை, தற்செயலாக சென்றேன்.

4. எத்தனை போலீசார் இருந்தார்கள் என்றால் 4, 5 போலீசார் இருந்தார்கள். போலீசார் சீருடையில் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நான் எத்தனை இடங்களில் கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு இடங்களில் கையொப்பம் செய்தேன். நான் சொன்னவாறு எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து

கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்து கொடுத்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 12.08.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI Digitally signed by G SREE DEVI Date: 2026.08.12 13:11:35 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
12.08.2026